## மத்திய அரசு + மாநில அரசு

1. மத்திய அரசு,இந்திய அரசமைப்பின் எத்தனையாவது பகுதியில் இடம்பெற்றுள்ளது?- பகுதி V

2. மத்திய அரசின் நிர்வாக தலைவர்-குடியரசுத் தலைவர்

3. கலை,இலக்கியம்,அறிவியல், விளையாட்டு மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் எத்தனை நபர்களை குடியரசு தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார்?-12

4. மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறும் சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 77

5. கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக எத்தனை முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?- 9 முறை

6. மத்திய பாதுகாப்பு படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தை குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ள சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 53(2)

7. தேசிய நெருக்கடி நிலை பற்றிக் கூறும் சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 352

8. குடியரசுத்தலைவர் தன்னுடைய பணி மற்றும் அதிகாரத்தை செய்ய வேண்டும் என எண்ணவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறும் சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 361(1)

9. இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவர் - டாக்டர்.ராதாகிருஷ்ணன்

10. பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றி கூறும் சட்டப்பிரிவு – சட்டப்பிரிவு 78

11. ராஜ்யசபா மொத்தம் எத்தனை உறுப்பினர்களை கொண்டது-250 உறுப்பினர்கள்

12. தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைக்கு எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?- 18 உறுப்பினர்கள்

13. பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறும் காலம்-பிப்ரவரி முதல் மே வரை

14. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலன்-உச்சநீதிமன்றம்

15. குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்ட உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் பெயர் – நீதிபதி M.ஹிதயத்துல்லா

16. மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தை பற்றி கூறும் சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 154

17. தமிழ்நாட்டில் எந்த ஆண்டு சட்ட மேலவை நீக்கப்பட்டது-1986

18. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்பு தலைவர்-ஆளுநர்

19. முதன்முதலில் உயர்நீதிமன்றங்கள் எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன -1862

20. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆங்கிலோ-இந்தியன் வகுப்பினரில் ஒருவரை நியமனம் செய்பவர்-ஆளுநர்

21.ஆட்சியிலிருந்த எம்.ஜி.ராமச்சந்திரன் இறப்புக்குப் பிறகு முதல்வராக செயல்பட்டவர்- ஜானகி ராமச்சந்திரன்

22. மாநில பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுபவர்- ஆளுநர்

23. மாநில அரசு,இந்திய அரசமைப்பில் எத்தனையாவது பகுதியில் அமைந்துள்ளது?- பகுதி VI

24. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளதை குறிக்கும் சட்டப்பிரிவு- சட்டப்பிரிவு 370

25. மாநில ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட எத்தனை வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்?- 35 வயது

26. மாநில சட்டமன்றம் நடைபெறாத போது ஆளுநர் அவசர சட்டத்தை பிறப்பிக்கலாம் என கூறும் அரசமைப்புச் சட்டப்பிரிவு-சட்டப்பிரிவு 213

27. சுதந்திரத்திற்குப் பிறகு தமிழகத்தின் முதல் முதலமைச்சராக இருந்தவர்-O.P.ராமசாமி

28. விதான் பரிஷத் என அழைக்கப்படுவது-சட்ட மேலவை

29. தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர்-பாத்திமா பீவி

30. சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம்- 6 ஆண்டுகள்